## 18

# இயற்கை அனர்த்தங்கள் சமூக ஒழுங்கில் ஏற்படுத்தும் தாக்கங்கள்: சுனாமியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு பாலமீன்மடு கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு

**வே. குணரத்தினம்**

சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

**கு. விக்னேஸ்வரன்**

உதவி விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

### ஆய்வுச் சுருக்கம்

சமூக ஒழுங்கு என்பது சமூகக் கட்டமைப்பிலுள்ள கூறுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட வகையில், செயற்பாட்டுரீதியில் ஒருமைப்பாடுடையதாக விளங்குகின்றமையை குறிக்கின்றது. இத்தகைய ஒருங்கிசைவான செயற்பாட்டிலேயே சமூக உறுப்பினர்களின் சமூகத்தேவைக்கான பூர்த்தியும் தங்கியுள்ளது. சமூகக்கட்டமைப்பில் காணப்படும் கூறுகள் அனைத்தும் சமூக நிறுவனங்கள், கலாசாரக் கூறுகள் என்னும் இரு பிரிவுக்குட்படுத்தப்படும்.

எந்தவொரு சமூகத்தினதும் சீரான இயக்கமானது, அச்சமூகத்தில் நிலவும் சமூக ஒழுங்கிலேயே தங்கியுள்ளது. சமூக உறுப்பினர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான செயற்பாட்டின் நிறைவிற்கு சமூக ஒழுங்கு அவசியமாகின்றது. சமூக ஒழுங்கின் சீர்குலைவானது, சமூக உறுப்பினர்களின் அன்றாட வாழ்வில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். சமூகத்தில் உறுப்பினர்களின் இடைத்தொடர்புபட்ட தேவைகளை திருப்தி செய்யும் வகையில், சமூகக் கூறுகளும் இடைத்தொடர்புபட்ட வகையிலேயே அமைந்திருப்பதனால், ஒரு சமூகக் கூறில் ஏற்படும் பாதிப்பு சமூகத்தின் அனைத்துக் கூறுகளையுமே பாதிக்கும். இது சமூக ஒழுங்கில் விளைவினைக் கொண்டிருக்கும்.

சமூக ஒழுங்கில் காணப்படும் கூறுகளின் அமைப்பிலும் செயற்பாட்டிலும் சடுதியான தாக்கத்தை உண்டுபண்ணும் காரணிகள் இயற்கை அனர்த்தமும் மனிதத்தலையீடுமேயாகும். இவ்வாய்வானது, **சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமூக நிறுவனங்களின் அமைப்பிலும் செயற்பாட்டிலும் ஏற்பட்ட உடைவுகள் அப்பகுதியில் ஏற்கனவே நிலவிய சமூக ஒழுங்கினை சீர்குலைத்துள்ளது** என்னும் கருதுகோளினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதாகும்.

மட்டக்களப்பின் பாலமீன்மடு கிராமத்தினை மாதிரியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது, சுனாமியினால் சமூகக்கூறுகளில் ஏற்பட்டுள்ள அமைப்புரீதியான உடைவுகளையும் செயற்பாட்டுரீதியான தடங்கல்களையும் இனங்காண்பதையும், சமூக ஒழுங்கினை மீளமைப்பதற்கான வழிவகைகளின் முன்மொழிவினையும் நோக்காகக்கொண்டிருந்தது. சமூக ஆய்வுமுறையியலின் பல கருவிகளையும் நுட்பங்களையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில், அக்கிராமத்தில் சுனாமி அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட கட்டமைப்புக் கூறுகளின் பாதிப்புக்கள் இனங்காணப்பட்டதுடன், அதன்வழி சமூக ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளதென்பதுவும் கண்டறியப்பட்டுள்ளது. அக்கிராமத்தின் சுனாமிக்கு முன்னரான ஒழுங்குடன் ஒப்பிட்டு நோக்கப்பட்ட, சுனாமியின் பின்னரான ஒழுங்கில் ஏற்பட்ட மாறுதல்களும் விபரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சீர்குலைந்துள்ள ஒழுங்கினை சீர்செய்வதற்கான வழிவகைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. எந்தவொரு இயற்கை அனர்த்தத்திலும் எந்தவொரு சமூகத்திலும் ஏற்படும் சமூக ஒழுங்கின் சீர்குலைவிற்கான காரணங்களை கண்டறிந்து, சீர்செய்வதற்கான ஒரு மாதிரியாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

## ஆய்வுக் கட்டுரை

### 1.1. அறிமுகம்

சமூக ஒழுங்கு என்பது சமூகத்தில் காணப்படும் கூறுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவகையில் ஒருமைப்பாடுடைய செயற்பாடுகளில் ஈடுபடும் தன்மையைக் குறிக்கின்றது. (Marshal, 1998:67). சமூகத்தில் காணப்படும் கூறுகளாக குடும்பம், திருமணம், கல்வி, சமயம், பொருளாதாரம், அரசியல் முதலான சமூக நிறுவனங்களையும், நெறிமுறைகள், விழுமியங்கள், வழக்காறுகள், மொழி முதலான கலாசார அம்சங்களையும் குறிப்பிடலாம். இக்கூறுகளில் ஏற்படும் பாதிப்புக்களோ, அக்கூறுகளுக்கிடையிலான உறவுகளில் ஏற்படும் பாதிப்புக்களோ சமூக ஒழுங்கில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

EUSL

உலகில் காணப்படும் சமூகங்களது அனுபவங்களின் படி, சமூக ஒழுங்கானது இரண்டு விதமான காரணிகளின் தாக்கத்தின் காரணமாக பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளது. அவையாவன, இயற்கை அனர்த்தம், மற்றையது மனித முயற்சி என்பனவாகும். மனித முயற்சிகளில் யுத்தத்தின் தாக்கமே முக்கியத்துவம் அளிக்கத்தக்கதாகும். யுத்தத்தினால் ஏற்பட்ட சமூக பிரச்சினைகள் பற்றிய பல சமூக விஞ்ஞான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையைப் பொறுத்த மட்டில் இயற்கை அனர்த்தம் தொடர்பான விடயத்தில் ஆரம்பத்தில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை என்றே கூறலாம்.

இவ்வாய்வானது, சுனாமி அனர்த்தத்தின் காரணமாக சமூக ஒழுங்கு எவ்வாறு பாதிப்படைந்துள்ளது என்பது பற்றிய ஆய்வாக அமைந்துள்ளது. இங்கு மட்டக்களப்பு பாலமீன்மடு என்னும் சுனாமியால் பாதிப்புற்ற ஒரு கிராமச் சமூகமே ஆய்வின் தளமாக கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வின் கருதுகோள் பின்வருமாறு அமைந்துள்ளது. “சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமூக நிறுவனங்கள் மற்றும் கலாசார உட்கூறுகளில் ஏற்பட்ட பாதிப்புக்கள் சமூக ஒழுங்கைச் சீர்குலைக்கும் என்பதாகும்.” இவ்வாய்வானது பாலமீன்மடு கிராமத்தில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட 2004 டிசம்பர் மாதத்தில் இருந்து 2005 ஜூலை மாதம் வரையான காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் இயற்கை அனர்த்தத்தினால் சமூக ஒழுங்கு எவ்வாறு சீர்குலைகின்றது என்பது பற்றியும் அதை எவ்வாறு சீர்செய்வது என்பது பற்றியும் நோக்கப்படுவதால், இக்காலப்பகுதி போதுமானதாக கொள்ளப்பட்டது.

**1.2. ஆய்வின் நோக்கங்கள்:**

- சுனாமி அனர்த்தத்திற்கு உள்ளான பகுதிகளில் சமூக நிறுவனங்கள், கலாசாரக் கூறுகளில் ஏற்பட்ட பாதிப்புக்களை இனங்காணல்.
- சமூகக் கூறுகளில் ஏற்பட்ட பாதிப்புக்களினால் சமூக ஒழுங்கு சீர்குலையும் வழிகளைக் கண்டறிதல்.
- சமூக ஒழுங்கினைச் சீர்செய்யும் வழிகளை முன்மொழிதல்.
- சமூக ஒழுங்கு பற்றிய செயற்பாட்டுவாதக் கோட்பாட்டினை (Functionalism) பரிசீலனை செய்தல்.

EUSL

### 1.3. ஆய்வு முறை:

ஆய்வு முறையை பொறுத்தவரை, இவ்வாய்வானது விபரணரீதியான ஆய்வாக (Descriptive Research) அமைந்துள்ளது. இங்கு தரரீதியான ஆய்வு முறையும் (Qualitative Method) எண் ரீதியான முறையில் (Quantitative Method) பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வில் முதன்நிலைத் தரவுகளை சேகரிப்பதற்காக அவதானம் (Observation), நேர்காணல் (Interview), வினாக்கொத்து (Questionnaire) ஆகிய முறைகள் கையாளப்பட்டன. அவதானத்தில் பங்குபற்றல் அவதானம் (Participatory Obeservation) மூலமே தரவுகள் திரட்டப்பட்டன. நேர்காணலில் கட்டமைக்கப்படாத நேர்காணலே (Unstructurted Interview) பயன்படுத்தப்பட்டது. வினாக்கொத்து முறையில் மூடிய வினாக்கொத்து முறையே கையாளப்பட்டது. இம்முறைகள் இவ்வாய்வு நோக்கத்தின் நிறைவுபடுத்தலுக்கான மக்களது உளப்பாங்குகள், கருத்துக்கள் என்பனவற்றை சுதந்திரமாக பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமாக அமையும் என்று கருதப்பட்டதால் தெரிவு செய்யப்பட்டன. இவ்வாய்வில் இரண்டாம் நிலைத்தரவுகள் கச்சேரியின் புள்ளி விபர அறிக்கை (Statistical Hand Book), கிராமசேவகர் ஆவணங்கள், சமுர்த்தி ஊக்குவிப்பாளர் ஆவணங்களில் இருந்து சேகரிக்கப்பட்டன.

ஆய்வுப் பிரதேசத்தின் சமூகக் கட்டமைப்பின் பரந்துபட்ட தன்மை காரணமாக, தரவு சேகரிக்கும் பொருட்டு மாதிரி எடுப்பு கையாளப்பட்டுள்ளது. இங்கு எழுமாற்றுரீதியான மாதிரியே (Random Sampling) கையாளப்பட்டது.


### 1.4. ஆய்வுப் பிரதேச சமூகக்கட்டமைப்பு:

#### 1.4.1. சமூக நிறுவனங்கள்:

இவ்வாய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதேசம் மட்டக்களப்பு பாலமீன்மடு என்னும் கிராமமாகும். இக்கிராமம் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள கடற்கரையோரக் கிராமமாகும் (173C கிராம சேவையாளர் பிரிவு). இக்கிராமத்தில் சுனாமிக்கு முந்திய சமூகக் கட்டமைப்பும் சுனாமிக்குப் பிந்திய கட்டமைப்பும் ஒப்பீட்டு நோக்கப்பட்டு முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன.

2003 ஆம் ஆண்டில் இக்கிராமம் 327 குடும்பங்களையும், 1296 மக்களையும் உள்ளடக்கியிருந்தது. இதில் 638 ஆண்களும், 658 பெண்களும் அடங்குவர். (Statistical Hand Book, 2003)

EUSL




**வரைபடம் 1**

ஒரு கிராமியச் சமூகம் என்ற அடிப்படையில் பாலமீன்மடு கிராமத்தின் சமூக நிறுவன அமைப்புக்களுக்கு தமது உறுப்பினர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய பிரதான கடப்பாடு இருந்தது. இக்கிராம உறுப்பினர்களின் தனிமனிதத் தேவைகளையும் சமூகத் தேவைகளையும் இந்நிறுவனங்களே பூர்த்தி செய்து வந்துள்ளன. பாலமீன்மடு கிராமத்தில் சமூக ஒழுங்கினை நிலை நாட்டுவதில் சமூக நிறுவனங்கள் ஆற்றிய பங்களிப்பினையும் சுனாமி அனர்த்தம் காரணமாக அவற்றில் ஏற்பட்ட உடைவுகளையும் இனங்காண்பதற்கு அந்நிறுவனங்களை தனித்தனியே நோக்குவது சாலப் பொருத்தமானதாகும்.


இக்கிராமத்தின் குடும்ப அமைப்பு முறையை நோக்குமிடத்து, இங்கு சுனாமிக்கு முன்னர் மணவழிக் குடும்பங்களே (Conjugal Family) காணப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் கட்டமைப்புக்கு இயைபுபட்ட வகையில் தாய்வழி மரபுக் குடும்ப அமைப்பு (Matrilimeal Family) இங்கு நிலவியது. அத்துடன், ஒருவனுக்கு ஒருத்தி என்னும் திருமணக் கட்டுப்பாடு நிலவியதால், இங்கு ஒரு துணை மணக்குடும்பங்களே (Monogamian Family) காணப்பட்டன. எனினும் இங்கு கூட்டுக் குடும்ப அமைப்பு முறை காணப்படவில்லை. இங்கு தனிக்குடும்பங்களே (Nuclear Family) காணப்பட்டன. திருமணத்திற்குப் பின் பெண்ணின் தாய் வீட்டில் வாழும் போக்குக் காணப்பட்டதால் தாய்வழி வதிவிட குடும்பங்களே (Matrilocal Family) காணப்பட்டன.

திருமண நிறுவனத்தை எடுத்து நோக்கும் போது, ஒரு தார மணமே (Monogarmy) இங்கு பிரதான அம்சமாக காணப்பட்டது. அத்துடன், அவர்கள் தமது சாதியினுள்ளேயே துணையை தெரிவு செய்து கொள்வதிலேயே அதிக ஆர்வம் காட்டினர். அதனால், இங்கு


EUSL

அகமண முறையே (Endogamy) நிலவியது. இருப்பினும் விதிவிலக்கான வகையில் புறமணமுறை (Exogamy) அரிதாக நிலவியது. இது ஒரு பிறழ்வாகவே கருதப்பட்டது.

கல்வி நிறுவனத்தை எடுத்து நோக்குமிடத்து, இந்நிறுவனத்தின் செயற்பாடு கருதி அங்கு இரண்டு பாடசாலைகள் கட்டப்பட்டன. அவை: மட்/ பாலமீன்மடு விக்னேஸ்வரா வித்தியாலயம், குழந்தை யேசு ஆரம்ப பாடசாலை என்பனவாகும். சமய நிறுவனத்தை பொறுத்தவரை, இந்து, கிறிஸ்தவ சமயங்கள் வழக்கத்தில் இருந்தன. சமூக ஒழுங்கின் பொருட்டான செயற்பாடுகளை இந்நிறுவனமானது ஆலயங்கள் ஊடாக ஆற்றிவந்தது. இக்கிராமத்தில் மூன்று இந்து ஆலயங்களும், ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் காணப்பட்டது. கிராம சேவகர் அறிக்கையின் பிரகாரம், 38 குடும்பங்கள் கிறிஸ்தவ சமயத்தை சார்ந்திருந்தன.




**வரைபடம்-2**




**வரைபடம்-3**

பொருளாதார நிறுவனத்தை பொறுத்தவரை இங்கு 262 குடும்பங்கள் மீன்பிடியினை தமது ஜீவனோபாயமாகக் கொண்டிருந்தன. சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களது அறிக்கையின் பிரகாரம், அரச துறையின் 34 குடும்பமும் மேசன் தொழிலில் 11 குடும்பங்களும் தச்சுத்

தொழிலில் 8 குடும்பங்களும் கூலித் தொழிலில் 6 குடும்பங்களும் பல சரக்கு வியாபாரத்தில் 6 குடும்பங்களும் ஈடுபட்டு இருந்தன.

ஆயினும் இக்குடும்பங்கள் அனைத்திலும் இருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டோரும் உண்டு. இவர்களது எண்ணிக்கை 13 ஆகும்.(சமுர்த்தி ஊக்குவிப்பாளர் அறிக்கை-2003).

**1.4.2. பண்பாட்டுக் கூறுகள்:**

கிராமத்துப்பண்பாட்டில் ஒரு கூறு என்ற வகையில் நெறிமுறைகள், இக்கிராமத்தில் ஒழுங்கினைப்பேண துணைநின்றன. இச்சமூகத்தில் எந்தச் செயல்களைச் செய்ய வேண்டும், எந்தச் செயல்களைத்தவிர்க்க வேண்டும் என்ற நடைமுறை இருந்து வந்தது. குறிப்பாக திருமணத்துக்கு முன்னரான பாலியல் நடத்தைகள், பல துணைமணம், பிறர் மனைநயவுதல், விலக்குடைய பெண்களின் சமய அனுட்டானங்கள், சடங்குகளில் கலந்து கொள்ளுதல் போன்ற விடயங்கள் மீது கடுமையான தடைகள் இருந்தது வந்துள்ளது. இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களிலிருந்து விலக்கப்பட்டும், ஒழுக்கரீதியான அந்தஸ்திலிருந்து குறைக்கப்பட்டும் வந்துள்ளனர்.

சுனாமிக்கு முன்னரான காலத்தில் இக்கிராமத்தில் சமூக ஒழுங்கைப்பேணுவதில் விழுமியங்களும் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்திருந்தன. இங்கு மக்கள் வாழ்க்கைக்கு உகந்த விடயங்கள் அனைத்தும் விழுமியங்களாக ஏற்கப்பட்டிருந்தன ஏனைய சமூகங்களைப்போலவே இக்கிராமத்து விழுமியங்கள் உறுப்பினர்கள் மீது கட்டாயத்தன்மையை ஏற்படுத்தியிருக்கவில்லை. இங்கு பெரியோர்களை கனம் செய்தல், களவுசெய்யாமை, இளம்பாராயத்தினர் மதுபானம், புகைத்தல் ஆகியவற்றை தவிர்த்தல் முதலான விழுமியங்கள் வழக்கில் இருந்து வந்துள்ளன. இவை தனிநபர் சார்ந்த நடத்தைத் தராதரங்களாக அன்றி, குழு சார்ந்த தராதரங்களாகவே காணப்பட்டன. இத்தராதரங்கள் மூலம் அச்சமூகத்தின் தூய்மை பேணப்படுவதாக கிராம உறுப்பினர்கள் மத்தியில் உணர்வு ஏற்பட்டிருந்தது. இவ்வுணர்வானது சமூக ஒருமைப்பாட்டிற்கும் வழி ஏற்படுத்தியிருந்தது.

இக்கிராமத்தில் அனர்த்தத்திற்கு முன்பு ஒழுங்கை நிலை நாட்டுவதில் வழக்காறுகள், குடிவழக்குகள், சமூக சட்டங்கள் என்பன துணை நின்றுள்ளன. கிராமத்து மக்களின் வாழ்க்கை முறையின் வழக்காறுகள் முக்கிய இடம்பெறுகின்றன. அம்மக்களின் வாழ்க்கை முறையில் நாளாந்தச் செயல்கள் அனைத்தும் தொன்று தொட்டு வழங்கி வந்த

EUSL

வழக்காறுகளில் உருவானவையாகும். இவை ஒரு தலைமுறையில் இருந்து மறு தலைமுறைக்கு கடத்தப்பட்டனவாகும். இவ்வாறான வழக்காறுகள் அன்றாட கடமைகளிலிருந்து ஆரம்பிக்கின்றன.

மேலும் இம்மக்களிடையே குடி வழக்குகளும் நிலவிவந்துள்ளன. இக்கிராமத்தில் ஆலய உற்சவ காலங்களில் மக்கள் மாமிச உணவு வகைகளைத் தவிர்த்து ஆலயச் சடங்குகளின் போது அதற்குரிய ஆடைகளை அணிவது, மரண நிகழ்வுகளின் போதும், திருமண, மற்றும் பூப்புனித நீராட்டு விழாவின் போதும் அதற்குரிய சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் மேற்கொள்வது என்பன குடிவழக்கின் பாற்பட்ட அம்சங்களாக கருதப்பட்டன. இவ்வாறான குடிவழக்குகள் சில இக்கிராமத்திற்கே உரியனவாக இருந்தன. இவை இக்கிராமத்தவரிடையே தனியடையாளத்துவம், ஒருமைப்பாடு என்பனவற்றை ஏற்படுத்துவதற்கும், அதன் வழியே சமூக ஒழுங்கைப் பேணுவதற்கும் வாய்ப்பாக அமைந்திருந்தன.

பழம்பெரும் கிராமமாக பாலமீன்மடு காணப்பட்டதால், அக்கிராமத்தில் சமூக சடங்குகளும் நடைமுறையில் இருந்து வந்துள்ளன. ஒரு சமூகத்திற்கு அவசியமான ஒழுக்கங்கள் இக்கிராமத்தில் எழுதப்படாத விதிகளாக இருந்துவந்துள்ளன. இவை இக் கிராமத்து விழுமியங்கள், வழக்காறுகள், குடிவழக்குகள் என்பன எடுத்துரைக்கும் அம்சங்களை உள்ளடக்குகின்றன. இதன் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் இம் மக்கள் மீது தண்டனை அளிக்கும் வகையில் மாற்றம் பெற்றிருந்தன. இத்தகைய விதிகள் பின்னர் அரசியல் சட்டங்களில் உள்ளடக்கப்பட்டும் இருந்தன. இச்சட்ட விதிகள் நேரடியாகத் தண்டனை அளிக்கும் தன்மையினைப் பெற்றிருந்ததனால், இவை இக்கிராமத்தில் சமூக கட்டுப்பாட்டை பேண துணைநின்று வந்துள்ளன.

### 1.5. சுனாமி அனர்த்தம் பாலமீன்மடு சமூகக் கட்டமைப்பில் ஏற்படுத்திய பாதிப்புக்கள்

#### 1.5.1. சமூக நிறுவனங்களில் ஏற்பட்ட பாதிப்புக்கள்

சுனாமி அனர்த்தமானது இக்கிராம குடும்ப நிறுவனங்களில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. அமைப்பளவில் நோக்கும் போது, இக்கிராமத்துக் குடும்ப நிறுவனங்கள் உறுப்பினர்களை இழந்துள்ளன. இருப்பிடங்களை இழந்துள்ளன. இங்கு 07 குடும்பங்கள் 10 உறுப்பினர்களை இழந்துள்ளன. 135 குடும்பங்கள் தமது இருப்பிடங்களை இழந்து தற்காலிகமாகத் தங்கியிருந்தன. 142 குடும்பங்கள் அருகில் உள்ள திராய்மடு கிராமத்திற்கு இடம் பெயர்ந்திருந்தன. இதே போன்று குடும்ப

நிறுவனங்களின் செயற்பாடுகளும் உடைவுற்று இருந்தன. குறிப்பாக, இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்கள் பாலியல் தேவையினை பூர்த்தி செய்யும் நிலையில் இருக்க வில்லை. அதே போன்று, குழந்தை வளர்ப்பு செயற்பாட்டினை முன்பு போன்று மேற்கொள்வது இட நெருக்கடி மிக்க சூழ்நிலையில் இவர்களுக்கு சிக்கலாக அமைந்திருந்தது. இருப்பிடம் அற்ற தன்மை, இடப்பெயர்வு, அகதி வாழ்வு என்பன இவர்களுக்கு தம்பிள்ளைகளை சமூகமயமாக்குவதற்கு முடியாதிருந்தது.

திருமண நிறுவனத்தை பொறுத்தமட்டில் அதன் அமைப்பில் மாறுதல் ஏற்பட்டிருந்தது புலனாகியது. சுனாமிக்குப் முன்னர் இக்கிராமத்தின் திருமணமானது சட்டரீதியான அம்சங்களையும், சடங்கு சார்ந்த அம்சங்களையும் உள்ளடக்கி இருந்தது. சுனாமிக்கு பின்னர் சடங்கு சார்ந்த அம்சங்கள் கைவிடப்பட்டிருந்தமை ஆய்வில் கண்டறியப்பட்டது. சுனாமித்தாக்கத்தின் பின்னர் இடம் பெற்ற 24 திருமணங்கள் இவற்றுள் சட்டரீதியான பதிவினையே பின்பற்றி இருந்தன. முன்பு கிராமத்தவர்களுள் ஏற்புடைய உறவு முறையின் உள்ளேயே திருமணங்கள் பெரும்பாலும் இடம் பெற்றன. ஆயினும் சுனாமியின் பின்னர் ஏற்புடையதல்லாத உறவினுள் திருமணங்கள் இடம்பெற்றிருந்தமை ஆய்வில் கண்டறியப்பட்டது.

கல்வி நிறுவனத்தினை நோக்கிய போது, இங்கு அதன் அமைப்பிலும் செயற்பாட்டிலும் பாதிப்புற்றமை கண்டறியப்பட்டது. இந்நிறுவனத்தின் நோக்கம் கருதி அமைக்கப்பட்ட ஆரம்ப பாடசாலையும், இரண்டாந்தரப் பாடசாலையையும் எந்தவித சேதத்திற்கும் உட்பட வில்லை. எனினும் தனியார் கல்வி நிறுவனங்கள் அமைப்பளவில் முழுமையான அழிவுகளை பெற்றிருந்தன. இது தவிர மாணவர்கள் தமது கற்றலுக்குத் தேவையான உபகரணங்களை இழந்திருந்தனர். செயற்பாட்டளவில் நோக்கும் போது நலன்புரி முகாமில் காணப்பட்ட இடநெருக்கடி, இரைச்சல், மின்சார வசதியின்மை, தளபாட வசதியின்மை என்பன கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தடையாக இருந்தமை கண்டறியப்பட்டது. சுனாமிக்கு பின்னர் இப்பாடசாலைகளில் மாணவர் வரவில் ஒழுங்கின்மை ஏற்பட்டது குறிப்பிட்டுக் கூறத்தக்க விடயமாகும்.

சமய நிறுவனத்தை எடுத்து நோக்கிய போது, இங்கிருந்த இந்து சமய, கிறிஸ்தவ சமய நிறுவனங்களில் செயற்பாட்டை புரியவென அமைக்கப்பட்டிருந்த ஆலயங்களில் ஓர் இந்து ஆலயமான மாரியம்மன் ஆலயம் இடிபாடுகளுக்கு உள்ளாகியிருந்தது. ஏனைய ஆலயங்கள் அமைப்பளவில் சேதங்களை அடையாத போதும் செயற்பாட்டளவில் சிதைவுற்று இருந்தன. இங்கு இந்து ஆலயங்களில் நாளாந்த பூசைகளை

EUSL

நடாத்துவது இயலாது இருந்தது. இதற்கு போதுமான பொருளாதார வசதி இன்மை காரணமாய் இருந்தது. அத்துடன், அப்பூசைகளில் மக்களின் பங்கு பற்றல் கூடியளவு இல்லாதிருந்தது. இவ்வாலயங்களில் வருடாந்தம் இடம் பெறும் சடங்குகள் கைவிடப்பட்டிருந்ததாக ஆலய பாரிபாலன சபையினர் தெரிவித்தனர். காரணம் மக்களிடம் அதற்கான பணத்தை வசூலிக்க முடிவதில்லை என்று தெரிவித்தனர். இத்தகைய சிக்கல்களை இங்கிருந்த கிறிஸ்தவ ஆலயம் கொண்டிருக்கவில்லை. இதனால் இங்கு மதமாற்றம் ஏற்பட வாய்ப்பிருந்தது. சில இந்துக் குடும்ப உறுப்பினர்கள் கிறிஸ்தவ மதத்ததை தழுவி இருந்தனர். அவர்களில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஒருவர் தான் அவ்வாறு மாறியமைக்கு தன் வறுமையே காரணம் எனக்குறிப்பிட்டு இருந்தார்.

இக்கிராமத்தில் பொருளாதாரமானது மீன் பிடியில் பெருமளவு தங்கியிருந்தது. சுனாமிக்கு முன் 262 குடும்பங்கள் மீனவர் சங்கத்தில் பதிவு செய்திருந்தன. இவர்கள் அனைவரினதும் மீன்பிடி உபகரணங்கள் சுனாமியின் காரணமாக சேதம் அடைந்திருந்தன. இதனால், இவர்கள் ஜீவனோபாயம் இன்றி இருந்தனர். சிலர் வேறு தொழில்களுக்கு சென்றனர். குறிப்பாக மேசன் கூலிகளாக மாறியிருந்தனர். சில குடும்பங்கள் வாழ்வாதாரத்திற்கான நிவாரணங்களில் மாத்திரமே தங்கியிருந்தன. பெறுமதிமிக்க உபகரணங்களை இவர்கள் இழந்திருந்தமையால் அத்தொழிலை ஆரம்பிக்க பெரும் முதலீடு தேவைப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர். இன்னும் சில பெண் தலைமைக் குடும்பங்கள் பனம்பொருள் கைத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். சுனாமியின் பின்னர் இங்கிருந்த பனம்பொருள் கைத்தொழில் நிலையம் முற்றாக அழிந்திருந்தது. இவ்வாறு பொருளாதார நிறுவனத்தில் ஏற்பட்ட பாதிப்பால் ஏனைய சமூக நிறுவனங்களின் இயக்கங்களையும் சீர்படுத்த முடியாமல் இருந்தது ஆய்வில் கண்டறியப்பட்டது.

### 1.5.2.பண்பாட்டுக் கூறுகளில் ஏற்பட்ட பாதிப்புக்கள்

இக்கிராமத்தில் சமூக நடத்தையினை ஒழுங்குபடுத்திப் பேணிய நெறிமுறைகள், விழுமியங்கள், வழக்காறுகள், சமூகச் சட்டங்கள் என்பன சுனாமிக்குப் பின்னர் தம் செயற்பாடுகளை உரிய முறையில் கொண்டிருக்கவில்லை.

இங்கு நெறிமுறைகளும் சுனாமிக்கு முன்பிருந்தது போல் இருக்க வில்லை. நெறிமுறை ரீதியாக அக்கிராமத்தில் முன்பிருந்த கட்டுப்பாடு தளர்வடைந்தே காணப்பட்டது. அதாவது, எவற்றைச் செய்யக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டதோ அவை மீறப்பட்டிருந்தன. எடுத்துக்காட்டாக,

EUSL

திருமணத்திற்கு முன்னர் ஓர் ஆணோ, பெண்ணோ பாலியல்ரீதியான தொடர்புகளை வைத்திருப்பது தடைசெய்யப்பட்டிருந்தது. ஆனால், சுனாமிக்கு பின் இவை பெருமளவில் மீறப்பட்டிருந்தமை ஆய்வின் போது இடம்பெற்ற கலந்துரையாடல்களில் இருந்து வெளிப்பட்டிருந்தது. முகாமில் இருந்த பெண்ணொருவர் அவ்வாறு நடப்பதாக பதிலாளிகள் பலர் தெரிவித்தனர். அத்துடன், சில இளைஞர்களும் யுவதிகளும் இரவு வேளைகளில் அருகில் உள்ள காட்டுப்பகுதியினுள் சென்று வருவது பங்குபற்றிய அவதானம் மூலம் கண்டறியப்பட்டது. இவர்கள் பெரும்பாலும் காதலர்களாகவே இருந்தனர்.

இக்கிராமத்தில் விழுமியங்களும் மீறப்படுவதாக கலந்துரையாடலின் போது இக் கிராம உறுப்பினர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அவதானம் மூலமும் இவ்விடயம் உறுதிப்படுத்தக் கூடியதாக அமைந்திருந்தது. இங்கு இளம் வயதினர் மதுபானம், புகைபிடித்தல் என்பது சமூகரீதியான பிறழ்வு நடத்தையாக கருதப்பட்டு வந்தது. சுனாமியின் பின்னர் இக்கிராமத்தில் சிறு வயதினர் ஊரின் ஒதுக்குப் புறமாக இவ்வாறான செயல்களில் ஈடுபடுவது பங்குபற்றிய அவதானத்தின் மூலம் கண்டறியப்பட்டது. இச்சிறுவர்களில் அனேகர் மேசன் கூலிகளாவர். சுனாமியின் பின் திருட்டுச் சம்பவங்கள் இப்பிரதேசத்தில் அதிகரித்திருந்தன. குறிப்பாக இரவு வேளைகளில் நலன்புரி முகாமிலும் கிராமத்திலும் இவை இடம் பெறுவதாக பதிலாளிகள் தெரிவித்தனர்.

இதேபோன்று பழக்க வழக்கங்களை உள்ளடக்கிய கிராமத்தின் வழக்காறுகளும் சிதைவடைந்திருந்தன. குறிப்பாக, இடம் பெயர்ந்து வாழும் மக்கள் தாம் முன்பு கைக்கொண்ட பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்க முடியாதிருப்பதாகத் தெரிவித்தனர். குடி வழக்குகள் சிலவற்றை மேற்கொள்வதில் இக்கிராமத்தில் சில குடும்பங்கள் சிக்கல்களை எதிர்கொண்டு வந்திருந்தன. குறிப்பாக சில சடங்குகளை மேற்கொள்வதில் இத்தகைய சிரமங்கள் எதிர்கொள்ளப்பட்டன. கிராமத்தின் ஆய்வுக்கு உட்படுத்திய குடும்பங்களில் ஒரு குடும்பத்தில் பெண்பிள்ளையொன்று வயதிற்கு வந்தது. ஆனால் அதற்குரிய சடங்குகளை செய்ய முடியவில்லை என்று அப்பிள்ளையின் தாயார் தெருவித்திருந்தார். சுனாமிக்கு முன்னர் இதற்குரிய ஏற்பாடுகளை செய்யத் திட்டமிட்டிருந்ததாகவும், சுனாமியின் பின்னர் ஏற்பட்ட வறுமைகாரணமாக அதைக் கைவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

EUSL

### 1.6. ஒழுங்குச் சீர்குலைவினால் ஏற்பட்ட பிரச்சினைகள்

#### 1.6.1. அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமை

இக்கிராமத்தில் சுனாமி அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட சமூக ஒழுங்குச் சீர்குலைவினால் மக்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். குறிப்பாக குடும்ப நிறுவனத்தில் ஏற்பட்டுள்ள செயற்பாட்டு முடக்கங்கள் சமூகத்தில் உறுப்பினர்களின் தேவையை பூர்த்தி செய்ய முடியாத அளவுக்கு மாற்றியுள்ளது. ஒரு சமூக உறுப்பினரின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றவற்றை குடும்பமே நிறைவேற்றுகின்றது. சுனாமிக்குப் பின்னர் இக்கிராமத்தில் குடும்பங்கள் இத்தகைய செயற்பாட்டினை நிறைவேற்ற பெரும் பிரயத்தனம் செய்தன. இக்கிராமத்திலுள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களில் அனேகமானவை தமது உணவுத் தேவைக்காக நிவாரண உதவிகளையே நம்பியிருந்தன.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 20 குடும்ப உறுப்பினர்களில் உணவுத் தேவை தொடர்பில் குறித்த அனைவரினதும் கருத்தும் ஒருமித்ததாகவே இருந்தன. குடும்பத்தின் வருமானம் உணவுத்தேவைகளை நிறைவு செய்யவும் உடைகள் வாங்கவும் போதுமானதாக இருப்பதில்லை என இவர்கள் தெரிவித்தனர். சில குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளின் கிடைப்பனவில் திருப்தி இருந்தாலும் அந்நிவாரணப் பொருட்கள் தொடர்பில் திருப்தியற்ற தன்மை இருந்தது.

பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு போதியளவு உடைகள் இல்லை என்றும் குறிப்பிட்டனர். அனர்த்தத்தின் போது தமது உடைமைகள் அனைத்தையும் இழந்துவிட்டதாக இவர்கள் கூறினர். தனக்கு நிவாரணமாக வழங்கப்பட்ட உடைகள் வீட்டில் அணிந்து கொள்ளவே பொருத்தமானது என்றும் பாடசாலைக்கோ அல்லது தொழில் நிலையங்களுக்கோ அணிந்து செல்ல ஏற்புடையதல்ல என்றும் தெரிவித்தனர். அத்தோடு குடும்ப உறுப்பினர்களுக்கு ஏற்ப இருப்பிட வசதிகள் போதுமானதாக இல்லை என்றும் இவர்கள் ஆதங்கப்பட்டனர். குறிப்பாக இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்கள் வசிப்பிடம் தொடர்பில் கடும் இன்னல்களை அனுபவித்தனர். கூடாரங்களும் மிக நெருக்கமாக அமைக்கப்பட்டிருந்தன. இவ்வாறான வசிப்பிடம் தமது பழைய வாழ்வில் மேற்கொண்ட செயற்பாடுகளைத் தொடர்வதற்கு பொருத்தமற்றது என்பதை ஆய்வுக்குட்பட்ட பலரும் தெரிவித்தனர். கிராமத்தில் இருப்பிடம் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தமது உறவினர்கள் வீட்டில் தங்கியிருந்தனர். இதனால் நெருக்கடியான

வசிப்பிடத்தையே தாம் தற்போது கொண்டிருப்பதாக தெரிவித்தனர். இவ்வாறான சூழ்நிலையில் குடிநீர், மலசல கூட வசதிகள் என்பவற்றின் கிடைப்பனவு போட்டிமிக்க நிலைக்கே தள்ளப்பட்டதாகவும் கூறினர். இதன்படி இக்கிராம மக்கள் அடிப்படைத் தேவைகள் தொடர்பில் முன்பு பெற்ற திருப்தியை தற்பொழுது பெறவில்லை என்பதை கண்டுகொள்ள முடிந்தது.

### 1.6.2. ஜீவனோபாயம் இன்மை

இக்கிராமத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் ஏராளமான குடும்பங்கள் தமது ஜீவனோபாயத்தை இழந்துள்ளன. இங்கு ஆய்வுக்குட்பட்ட 20 குடும்பங்களுமே தமது ஜீவனோபாயத்துக்காக பெரும் சிக்கல்களை எதிர்கொண்டனர். இக்குடும்பங்களில் 16 குடும்பங்கள் முற்றுமுழுதாக மீன்பிடியையே நம்பி இருந்தன. சுனாமி அனர்த்தத்தில் இவர்கள் அனைவருமே தமது மீன்பிடித் தொழிலுக்குரிய தோணி, இயந்திரப்படகு, வலைகள் முதலானவற்றை இழந்துள்ளனர். மீண்டும் தொழிலை தொடங்குவதென்றால் பெருந்தொகை முதலீடு செய்யவேண்டியுள்ளதாக சிலர் தெரிவித்தனர். ஏனெனில் ஒரு தோணி, வலை வாங்குவதற்கு சுமார் 1.5 இலட்சம் தேவைப்படும் என இவர்கள் தெரிவித்தனர். அந்தளவு பணம் தம்மிடம் இல்லை என்றும் அவர்கள் கூறினர். இவர்களில் சிலர் சுனாமிக்கு முன் வைத்திருந்த தோணிகள் உறவினர்களிடம் கடன் பெற்று வாங்கியவை. இக்குடும்பங்களில் உள்ள ஆண்கள் பலர் தமக்கு மீன்பிடியை தவிர வேறு தொழில்கள் கிடையாது எனக் கூறினர். எந்த தொழிலுமின்றியே வாழ்வதாக இவர்கள் கூறினர்.

ஆய்வுக்குட்படுத்திய குடும்பங்களில் 3 பெண் தலைமைக் குடும்பங்களும் அடங்கும். கணவனை இழந்த விதைவைகளாக வாழும் இவர்கள் தமது ஜீவனோபாயத்தை இழந்து வாழ்ந்தனர். இவர்கள் தமது ஜீவனோபாயத்துக்காக இடியப்பம், கடையப்பம் அவித்து விற்றுவந்தனர். சுனாமி அனர்த்தம் காரணமாக இவர்களது வீடுகள் முற்றாக அழிந்துவிட்டன. இவர்களது உடைமைகள் தொலைந்தும், அழிந்தும் விட்டன. தற்காலிக முகாம் அமைத்து வாழ்ந்து வரும் இப்பெண்கள் தமது பிள்ளைகளை வளர்ப்பதற்கு எந்த வருவாயும் இன்றி உள்ளனர். இதில் ஒரு பெண் கூலிக்கு வேலை செல்வதாக கூறினார். இன்னொருவர் தான் மீன் வியாபாரம் செய்து குடும்பத்தை நடத்தியதாகக் கூறினார். தினமும் முகத்துவாரத்துக்கு சென்று மீன் வாங்கி அதனை கருவப்பங்கேணி, இருதயபுரம் ஆகிய இடங்களுக்கு துவிச்சக்கர வண்டியில் கொண்டு

EUSL

சென்று விற்றதாகக் கூறும் இவர் தன்னிடம் துவிச்சக்கர வண்டி இல்லை என்றும் இதனால் மீன்வியாபாரத்துக்கு போக முடியவில்லை என்றும் கூறினார். இக்கிராமத்தில் குறைந்தளவானோரே அரச உத்தியோகங்களை மேற்கொண்டிருந்தனர். ஏனைய குடும்பங்கள் தமது ஜீவனோபாயத்தை இழந்தே வாழ்ந்தனர்.

### 1.6.3. ஒழுக்க மீறல்களும் முரண்பாடுகளும்

பாலமீன்மடு கிராமம் சுனாமிக்கு முன்னரான காலப்பகுதியில் நிறுவனங்களினதும், பண்பாட்டுக் கூறுகளினதும் சீரான செயற்பாட்டின் மூலம் சமூக ஒழுங்கு நிலவிய கிராமமாகும். இங்கு இந்த ஒழுங்கானது அக்கிராமத்தில் ஒழுக்கம் சார்ந்த நடத்தைகள் உருவாக ஏதுவாக அமைந்தது. இதனால் மக்களிடையே பிறழ்வு நடத்தைகளும், முரண்பாடுகளும் மிக அரிதாகவே இங்கு காணப்பட்டன. சுனாமி அனர்த்தத்தின் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட கட்டமைப்புக் கூறுகள் சீரான வகையில் செயற்படாது போயின. இதனால் இங்கு ஒழுக்க விடயம் தொடர்பில் பிறழ்வுகளும் முரண்பாடுகளும் அடிக்கடி இடம்பெறுகின்றன. கிராம உறுப்பினர்களுடனான கலந்துரையாடல்களின் போது இங்கு இடம் பெறும் ஒழுக்க பிறழ்வுகளையும் முரண்பாடுகளையும் அறிந்து கொள்ள முடிந்தது. கிராமத்தில் ஆய்வின் நிமித்தம் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்ட ஒருவர் இங்கு அனர்த்தத்தின் பின் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாக குறிப்பிட்டார். இடம்பெயர்ந்து முகாம்களில் வாழ்பவர்களே திருட்டுச் சம்பவங்களுக்கு காரணம் என தெரிவித்தார். யாரும் இல்லாத வேளைகளில் வீடுகளுக்குள் புகுந்து கையில் அகப்பட்ட பொருட்களை திருடுவதாக கிராமத்தவர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறான திருட்டுக்களில் பெண்களும் ஈடுபடுவதாக அவர்கள் தெரிவித்தனர். மேலும் கிராமத்தில் முன்னரைவிட மதுப் பாவனை அதிகரித்துள்ளதாக வயோதிபப் பெண் ஒருவர் தெரிவித்தார்.

கிராமத்தில் மீனவர்கள் முன்பு கடைப்பிடித்த சட்ட ஒழுங்குகளை கடைப்பிடிக்கவில்லை. இதனால் இவர்களுள் பிரச்சினை ஏற்படுவதாக மீனவர் சங்கத்தலைவர் குறிப்பிடுகின்றார். இவ்வாறான சட்ட மீறல்கள் கடல்நீர் மீன்பிடியிலும் நன்னீர் மீன்பிடியிலும் இடம் பெறுவதாக இவர் குறிப்பிட்டார். இங்கு மீன் பிடிக்கும் போது ஏழரை அங்குலத்திற்கு குறையாத வலைகளையே பயன்படுத்த வேண்டும் என்ற சட்டம் உள்ளது. அத்தோடு தங்கூசி வலைகள் பாவித்தல், டைனமைற் பாவித்து மீன்பிடித்தல் என்பனவும் தடை செய்யப்பட்டுள்ளன. நன்னீர் மீன்பிடியிலும் சட்டம்

EUSL

உள்ளது. அதாவது மீனவர்கள் மீனவர் சங்க அனுமதியின்றி மீன்பிடிப்பது இங்கு தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் இவ்விரு மீன்பிடியிலும் சட்ட மீறல்கள் அடிக்கடி நிகழ்வதாக மீனவர் சங்க தலைவர் குறிப்பிட்டார். சுனாமிக்குப் பின் சிலர் கடலில் சிறிய கண் வலைகளையும், தங்கூசி வலைகளையும் பாவிக்கின்றனர். அத்தோடு ஆற்றில் அனுமதியின்றியும் மீன் பிடிக்கின்றனர். இதனால் ஏனைய மீனவர்கள் தாமும் அவ்வாறு செய்யப்போவதாக கூறுகின்றனர். அவர்களுடன் வாக்குவாதம், கைச்சண்டை ஆகியவற்றில் அவர் ஈடுபடுவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் இக்கிராமத்தில் நிலம் தொடர்பிலும் பிரச்சினைகள் எழுவதாக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட கிராமத்தவர்கள் தெரிவித்தனர். சுனாமித் தாக்கத்தால் இருப்பிடங்கள் சின்னா பின்னமாகியுள்ளன. இதனால் வளவுகளின் எல்லைகளும் இல்லாது போயுள்ளன. இதனால் அங்கு மீளக்குடியேற வருவோர் எல்லை தொடர்பில் அயலவர்களுடன் முரண்படுவதாக கிராம உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். இவர்களின் ஆவணங்கள் அனைத்தும் தொலைந்து போயுள்ள நிலையில் இத்தகைய எல்லை முரண்பாடுகளைத் தீர்ப்பதும் சிரமமாக உள்ளதாக மற்றொருவர் குறிப்பிட்டார். சுனாமிக்குப் பின் இக்கிராமத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்பட்டிருப்பதானது கிராமத்தில் முரண்பாடுகள் அதிகரித்த தன்மையையே காட்டுகின்றது. கிராமத்தில் நிறுவன அமைப்புக்கள் சீரற்று இருப்பதுவே இதற்கு முக்கிய காரணமாகும். முக்கியமாக குடும்ப நிறுவனத்தில் ஏற்பட்டுள்ள உடைவுகளே இக்கிராமத்தில் பிறழ்வு நடத்தைக்குக் காரணமாக உள்ளன எனலாம்.

## 1.7. சமூக ஒழுங்கை மீளமைப்பதற்கான முன்மொழிவுகள்

### 1.7.1. மீள்குடியேற்றமும், மாற்று இருப்பிடமும்

இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வாழ்வோரில் பெரும்பாலானோர் தமது சொந்த இடங்களுக்கே மீளச் செல்வதற்கு விரும்புவது ஆய்வின் போதான கலந்துரையாடலில் வெளிப்பட்டது. தாம் முன்பு செய்த தொழிலையே மீண்டும் செய்ய விரும்புவதாகவும், அதனாலேயே அங்கு செல்ல விரும்புவதாகவும் இவர்கள் குறிப்பிட்டனர். ஆனால் தற்காலிக கூடாரங்கள் அமைத்து வாழும் இவர்களை அங்கிருந்து இன்னும் சற்றுத் தொலைவில் குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

EUSL

அரச சார்பற்ற நிறுவனங்களால் அமைக்கப்படும் இந்தக் குடியிருப்புக்களும் முகாம் போன்றனவாகவே இருந்தன. இங்கு குடும்பங்களின் இருப்பிடத்திற்காக வீடுகளே கருத்தில் கொள்ளப்படுகின்றன. நிலம் தொடர்பான இடவசதிகள் இங்கு கருத்தில் கொள்ளப்படுவதில்லை. இங்கு வீடுகள், தற்போது முகாமில் உள்ளது போன்று மிக நெருக்கமாகவே அமைக்கப்பட்டு வந்தன. இத்தகைய குடியிருப்பு முறை அம்மக்களிடத்தில் அகதி வாழ்வை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பது போன்றதாகும். இது தொடர்பாக இதற்கு முன் யுத்த சூழ்நிலைக் காலத்தில் கையாண்ட வழிமுறைகளைக் கையாள்வது பொருத்தமாக இருக்கும். இக்காலத்தில் இலங்கையில் மீளக் குடியமர்த்தும் திட்டங்களில் நிலம் தொடர்பிலான விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக எருக்கலம்பிட்டி மீள்குடியேற்றத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக 10 பேர்ச் நிலமும், நிரந்தர வீடமைப்புக் கடனும், மாதாமாதம் உதவித் தொகையும் வழங்கப்பட்டிருந்தன. (Silva, 2003:256). இத்தகைய நடைமுறைகளை சுனாமியால் பாதிப்புற்ற மக்களை மீள்குடியேற்றுவதிலும் கடைப்பிடித்தல் அவசியமானது. ஏனெனில் நிரந்தரமற்றதான அகதி வாழ்வு குழப்ப நிலைகளுக்கே வழிவகுக்கும்.

### 1.7.2. பொருளாதார உட்கட்டமைப்பை மறுசீரமைத்தல்

பாலமீன்மடு கிராமத்தின் பொருளாதாரம் அதிகமானளவு மீன்பிடியிலேயே தங்கியிருந்து வந்துள்ளது. மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டாவது பெரிய மீன்பிடிக் கிராமமாகும். இங்கு மக்கள் மூன்று வழிகளில் மீன்பிடித்தல் மூலம் தனது பொருளாதாரத்தை ஈட்டிக் கொள்கின்றனர். அவையாவன: கடல் நீர் மீன்பிடி, நன்னீர் மீன்பிடி, வாவி நீர் மீன்பிடி என்பனவாகும். இப்பிரதேச செயலாளர் செயலகப் பிரிவில் 85.9% வாவி மீன்பிடியே இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். (Dharmaretnam and Thamilchelvi 2003: 273). இதனிடையில் இக்கிராமத்திலும் அதிகமான மக்கள் வாவி மீன்பிடியையே தனது ஜீவனோபாயமாகக் கொண்டுள்ளனர். இவர்களது வருமானம் 1000 ரூபாய்க்கும் குறைவானதாகக் காணப்படுவதாக சமுர்த்திப் பதிவுகள் காட்டுகின்றன. இவ்வாறான குடும்பங்கள் தமது தொழிலை மீள மேற்கொள்வது மிகவும் கடினமானதாகும். இவர்கள் தமது தோணிகள், வலைகள் என்பனவற்றையும் முற்றாக இழந்துள்ளனர்.

இந்நிலையில் இவர்களுக்கு மீண்டும் தொழில் செய்வதற்குரிய உபகரணங்களை வழங்க வேண்டியது அவசியம். அத்தோடு கடல் நீர் மீன்பிடித் தொழிலாளர்களும் இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளத்தக்கவர்கள். இவர்களது மீன்பிடி உபகரணங்கள் மிகவும் விலை கூடியனவாகும்.

சுனாமிக்கு முன் இவர்களில் பலரின் மாத வருமானம் 1000 ரூபாவிற்கு அதிகமாகவே இருந்தது. இவர்கள் மீண்டும் கடல் நீர் மீன்பிடியைச் செய்ய விரும்புகின்றனர். இதனால் இவர்கள் பெறுமதி வாய்ந்த உபகரணங்களையே நிவாரணமாக எதிர்பார்க்கின்றனர். இவ் உபகரணங்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாயாவது தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் இவர்களது கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படுவது கடினம் என்றே தோன்றுகின்றது. எனினும் இவர்களது பொருளாதாரத்தை மீளமைக்கும் பொருட்டு வட்டியில்லா கடனுதவிகளை வழங்குதல் உடனடியானதாகவும் பொருத்தமான பரிகாரமானதாகவும் இருக்கும். அல்லது இவர்களுக்குத் தேவையான ஒரு பகுதி உபகரணங்களை இலவசமாக வழங்கி விட்டு மிகுதியை வாங்குவதற்குரிய தொகையை கடனுதவி வழங்கலாம். அதாவது இவர்கள் முன்பு வைத்திருந்தது போல பைபர் படகுகளையும், இயந்திரங்களையும் இலவசமாகக் கொடுத்து விட்டு வலைகள் வாங்குவதற்குரிய தொகையை கடனாக வழங்கலாம். அதைத் தவிர இப்பகுதியில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இவற்றினைப் பகுதியாகப் பிரித்து குறிப்பிட்ட பகுதியை மானியமாக வழங்குதல் சிறந்ததாகும்.

### 1.7.3. கட்டமைப்புக் கூறுகளை மீட்டுருவாக்கம் செய்தல்

இத்தகைய நடவடிக்கைகளை அரச திணைக்களங்களே மேற்கொள்வது அவசியம். அரச சார்பற்ற நிறுவனங்களைப் பொறுத்தவரையில் இவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்குவது சிறந்ததாகும். இப்பகுதியில் யுனிசெப் (UNICEF) நிறுவனமானது மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கியது. அத்துடன் ஆசிரியர்கள் தொடர்பிலும் இத்தகைய உதவிகளை மேற்கொள்வது அவசியம்.

இக்கிராமத்தில் சமூக ஒழுங்கிற்கான ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் சமய நிறுவனத்தைக் கட்டியெழுப்புவதும் அவசியமானதாகும். அனர்த்தம் காரணமாக ஆலயங்களில் ஏற்பட்டுள்ள இடிபாடுகளைச் சீர்திருத்தி, மறுபடியும் ஆலயங்களைப் புனருத்தானம் செய்வது மக்களை ஆலயச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்ளச் செய்ய உதவும். ஆலயங்களை மையமாகக் கொண்டு இடம் பெற்ற அறநெறிக் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் இயங்கச் செய்தல் வேண்டும். இது தொடர்பாக அந்தந்த சமயத்துக்குப் பொறுப்பான அரச அமைச்சுக்களும் ஏனைய சமய நிறுவனங்களும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் ஆகும்.

இவ்வாறு சமூக நிறுவனங்களை சீரமைப்பதானது அப்பிரதேசத்தில் பண்பாட்டுக் கூறுகளை சீரமைப்பதற்கு உதவும். அதாவது நிறுவனச்

EUSL

சீராக்கங்கள் மக்களின் பழைய நடத்தைகளை மீளமைக்கும் பொழுது பண்பாட்டுக் கூறுகளும் மீளமைக்கப்படும். ஏனெனில் பண்பாடு என்பது மக்களின் வாழ்க்கை வழிமுறைகளேயாகும். இந்நிலையில் சீராக்கப்பட்ட தமது வாழ்வினைத் தக்க வைத்துக் கொள்ளும் பொருட்டு மக்கள் நெறிமுறைகள், விழுமியங்களை முறைப்படி கடைப்பிடிக்க முன் வருவர். இது பண்பாட்டுக் கூறுகளின் மறுசீரமைப்புக்கு வழிவகுக்கும்.

### 1.7.4. அரச, அரசசார்பற்ற நிறுவனங்களை மீளமைத்தல்

சிவில், சமூக நிறுவனங்கள் செயற்படாது இருப்பதும், முரண்பாடுகள் நிறையப் பெற்றிருப்பதும் இக்கிராமத்தில் குழு உருவாக்கச் செயன்முறைகளை வெகுவாகப் பாதித்துள்ளது. இதில் சமூக மக்களிடையே ஒருமைப்பாட்டையும் சமூகத்தில் ஒழுங்கையும் பாதித்துள்ளது. இதனைத் தவிர்க்கும் வகையில் இச்சிவில் சமூக அமைப்புக்களை மீளக் கட்டியெழுப்புதலானது சமூக ஒழுங்கை மீளமைக்க உதவும். இதற்கு முதலில் கிராம உறுப்பினர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அத்தோடு அவை தனது செயற்பாடுகளைத் திறம்படச் செய்ய அந்நிறுவனங்களுக்கு நிதியுதவியளித்தல் வேண்டும். அது அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படலாம். இந்நிதி உதவிகள் அந்நிறுவனத்தின் சீரான செயற்பாட்டினை மேம்படுத்தும் வகையில் பயன்படுத்தப்படுகின்றனவா எனக் கண்காணிக்கும் பணியை நிதி வழங்கும் நிறுவனங்கள் மேற்கொள்ளலாம். குறிப்பிட்ட தொகை நிதியை தொடர்ச்சியான தவணை முறையில் வழங்கும் போது அவர்களின் செயற்பாடுகள் மதிப்பிடப்படல் வேண்டும். அவர்களின் செயற்பாடுகள் திருப்தியற்றிருப்பின் நிதியை நிறுத்தும் நிபந்தனையும் இதில் உள்ளடக்கப்பட்டால் இவ்வமைப்புக்கள் சிறப்பாக செயற்பட முன்வரும். இது கிராமத்தில் ஒருமைப்பாட்டையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்தும். இதனால் இக்கிராமத்தில் சமூக ஒழுங்கானது மீளமைக்கப்படும்.

### 1.7.5. நிருவாக நடவடிக்கைச் சீராக்கம்

அனர்த்தத்தினால் சமூகத்தில் ஏற்பட்ட உடைவுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு அரச மேலதிக நிருவாகக் கட்டமைப்புக்களை உருவாக்குதல் அவசியமாகும். இவ்வமைப்புக்கள் பிரதேசத்தில் ஏற்கனவே நிலவிய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டதாகவும் ஏற்கத்தக்க பொதுவான செயற்பாடுகளை உடையதாகவும் இருத்தல் அவசியம். மேலும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இப்பிரதேசத்தில் இலகுவாக தனது செயற்பாடுகளை முன்னெடுக்கும் வண்ணம் இலங்கை அரசானது முன்பு

நிறுவனங்கள் தொடர்பில் கடைப்பிடித்த கட்டுப்பாடுகளை தளர்த்துதல் அவசியம். யுத்தகாலத்தில் புனர்நிர்மாணப் பணிகளை அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்வதில் இலங்கை அரசு இடம், காலம் தொடர்பில் சில வரையறைகளை விதித்துள்ளது. இவ்வரையறைகளை நிவாரணப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு தளர்த்துதல் வேண்டும்.

### 1.7.6. மக்கள் மூலமான சுய மீளமைப்பிற்கான ஏற்பாடுகள்

மேற்குறிப்பிட்ட சீராக்கல் நடவடிக்கைகள் அனைத்தும் அரச, அரசசார்பற்ற உதவிகளிலேயே தங்கியிருக்கின்றன. அவ்வுதவிகளிற் சில சமூக ஒழுங்கை மீளமைப்பதற்கு அவசியமான பங்களிப்பை செய்கின்றமை மறுக்கப்பட முடியாத அம்சமாகும். எனினும் இவ்வாறான வெளிவாரியான உதவிகள் மூலம் கட்டமைக்கப்படும் ஒழுங்கில் நிலவுகின்ற உறவுகள் அல்லது இடைவினைகள் நெருக்கமான தன்மையை கொண்டிருக்காது. தாம் வெளிவாரியான தூண்டல் மூலம் இயங்குகின்ற மன உணர்வே இவர்களுக்கு அதிகமாக இருக்கும். இது அக்கிராம மக்கள் மத்தியில் நிலவ வேண்டிய ஒருமைப்பாட்டிற்கு பங்கமாக அமையலாம்.

இவ்வாறான நிலைமையை தவிர்ப்பதற்கு அவசியமான தங்கியிருக்கும் விடயங்களை விடுத்து, மக்கள் அவர்களாகவே ஒழுங்கினைச் சீர்செய்யும் வழிவகைகளை அறிவுறுத்துவது பொருத்தமானதாகும். இவ்வாறான அறிவுறுத்தல்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களாகவோ அல்லது செயலமர்வுகளாகவோ அமைந்திருக்கலாம். இவற்றில் இரண்டு விடயங்கள் முக்கியமாக இடம்பெறுதல் அவசியம். முதலாவது சமூக ஒழுங்கானது சீர்குலைவதை எவ்வாறு தடுக்கலாம் என்பது பற்றி அறிவுறுத்துவதுடன், அதற்குரிய ஆரம்ப எச்சரிக்கை முறையையும் (Early Warning System) உருவாக்குவதற்கும் அறிவுறுத்தல். இரண்டாவது, தவிர்க்க முடியாத வகையில் சமூக ஒழுங்கு சீர்குலையும் போது, அதனால் ஏற்படும் தாக்கங்களை குறிப்பிட்டு, அதற்கான உடனடியான அல்லது தற்காலிக, மற்றும் நீண்டகால சீராக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வழிமுறைகளை அறிவுறுத்துதல்.

### 1.8. முடிவு

சுனாமி அனர்த்தம் சமூக ஒழுங்கில் ஏற்படுத்திய பாதிப்புக்கள் என்னும் தலைப்பிலான இவ் ஆய்வானது சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு சமூகக் கட்டமைப்பை மீளக்கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டது. சமூகம் என்பது பல கூறுகளால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பைக் கொண்டது. இக்கட்டமைப்பு

EUSL

மக்களின் நடத்தைகளை வடிவமைக்கின்றது. இவற்றினூடாக மக்கள் தமது நாளாந்த வாழ்க்கைக்கான சமூக செயல்களை ஆற்றுகின்றனர். எனவே கட்டமைப்புக் கூறுகளில் ஏற்படும் உடைவுகள் மக்கள் தமது நடத்தைகளை மேற்கொள்வதில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். ஆகையால் சுனாமி அனர்த்தம் காரணமாக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஏதுவாக கட்டமைப்புக் கூறுகளில் ஏற்பட்ட உடைவுகளே காரணம் என்ற எடுகோளின் படி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த உடைவுகளை இனங்கண்டு கட்டமைப்புக் கூறுகளை மீள் உருவாக்கம் செய்வதனூடாக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் எனலாம்.

**உசாத்துணை**

**நூல்கள்:**

1. Marshall, Gorden(1998), Oxford Dictionary of Sociology, Oxford University Press, New York.
2. Dharmaretnam, Meena and Thamilchelvi, T. (2003), "Conflict and Natural Resource – based Livelihood: the Case of Lagoon Fisher Families in Batticaloa with a Focus on Women", in Markus Mayer, Darini Rajasingam Senanayake, Yuvi Thangaraja, Building Local Capacities for Peace: Rethinking conflict and Development in Sri Lanka, Macmillan India Ltd.
3. Silva, Kalinga Tudor (2003), "Armed Conflict, Displacement and Poverty Trends in Sri Lanka: Evidence from Selected Displced Populations", in Markus Mayer, Darini Rajasingham – Senanayake, Yuvi Thangaraja, Building Local Capacities for Peace: Rethinking Conflict and Development in Sri Lanka, Macmillan India Ltd.

**அறிக்கைகள்:**

1. Statistical hand book-2003, Kacheri, Batticaloa
2. கிராம சேவகர் அறிக்கை-2003
3. கிராம சேவகர் அறிக்கை-2005

EUSL

4. சமுர்த்தி ஊக்குவிப்பாளர் அறிக்கை- 2003

5. சமுர்த்தி ஊக்குவிப்பாளர் அறிக்கை- 2005

**பின்னிணைப்பு**

**வரைபடங்கள்**

1. கிராமத்தின் ஆண், பெண் விபரம்
2. கிராமத்தின் சமயநிலை
3. கிராமத்தின் பொருளாதாரநிலை

EUSL